10-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் பெற்ற பள்ளிகளின் தாளாளர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரையும் மறைமாவட்டக் கல்விப் பணிக்குழு பெருமிதத்துடன் பாராட்டுகிறது.

## கண்காணிப்பாளர் அலுவலகத் தகவல்கள்

மே மாதம் - அலுவலகத்திற்கு வந்த கடிதங்கள் 11

- அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் 40

## கண்காணிப்பாளர் அலுவலக இம்மாத விடுமுறை நாள்கள்

ஜூலை 18 சனி ரம்ஜான் பண்டிகை

## நிகழ இருப்பவை

**❁ ஆசிரியர் நலநிதி கடன் வழங்கல் :**

நாள் : 11.07.2015 சனிக்கிழமை

நேரம் : மாலை 3.00 மணி

இடம் : ஆசிரியர் நலநிதி சங்க அலுவலகம், வள்ளியூர்

**❁ மறைமாவட்டக் கல்விக்குழுக் கூட்டம் :**

நாள் : 28.07.2015 செவ்வாய்கிழமை

நேரம் : காலை 10.00 மணி

இடம் : கத்தோலிக்க ஆயர் இல்லம்

## ஆசிரியர்களின் கவனத்திற்கு

**நிரப்ப தகுந்த நிரந்தர இடைநிலை உதவி ஆசிரியர் பணியிடங்கள் :**

- ஆர்.சி. தொடக்கப்பள்ளி, பெரியதாழை - 02
- புனித சவேரியார் தொடக்கப்பள்ளி, பெருமணல் - 01
- புனித அந்தோணியார் ஆர்.சி. தொடக்கப்பள்ளி, அச்சம்பாடு கிழவநேரி பங்கு - 01
- புனித அந்தோணியார் ஆர்.சி. தொடக்கப்பள்ளி, பெரியசாமிபுரம் - 01

மேற்கண்ட பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு, பணியிட மாறுதல் பெற விரும்பும் இடைநிலை உதவி ஆசிரியர்கள் தங்கள் தாளாளர் வழியாக மேதகு ஆயர் அவர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

## ஆசிரியர் நலநிதி உறுப்பினர்களின் கவனத்திற்கு

தூத்துக்குடி கத்தோலிக்க மறைமாவட்ட ஆசிரியர் நலநிதி உறுப்பினர்களுக்கான பொதுக்குழு கூட்டம் **26.09.2015 சனிக்கிழமை** அன்று நடைபெற இருப்பதை முன்னிட்டு உறுப்பினர்களுக்காக சிறப்பு போட்டிகள் (கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, சிறுகதைப் போட்டி) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் **"ஆசிரியர் பணிவாழ்வில் அர்ப்பணம்"** என்ற தலைப்பில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் எழுதி, **31.08.2015-க்குள்** கத்தோலிக்கப்பள்ளிகளின்